**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 40/2019

நாள் : 19.06.2025

பி.வா.சா.2 திரு.ராமு மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

நான் வாதியின் பவர் ஏஜெண்ட் ஆவேன். வாதி என்ன வழக்கு போட்டிருக்கிறார் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்க்ல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்ன விபரம் உள்ளது என எனக்கு தெரியும். நான் வழக்கு போட்டுள்ளது சுமார் 5 செண்ட் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்துடன் சேர்ந்த மொத்த சொத்தின் அளவு 43 செண்ட் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மொத்த சொத்து ஒரே காம்பவுண்ட்டிற்குள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து தற்போது என் கைவசம் உள்ளது. வாதி இந்த வழக்கை தாவா சொத்தின் சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து பாத்திமாகனி என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு தாவா சொத்து பாத்திமாகனிக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பட்டா மற்றும் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி பாத்திமாகனி தாவா சொத்தை அனுபவம் செய்ததை காண்பிக்க வரிரசீது ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம். மேற்படி பாத்திமாகனி அவரது மகன் முகம்மது இப்ராஹிமுக்கு 16.09.2002 ல் இனாம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி வழக்கு சொத்தை தேன்மொழி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார்

என்றால் சரிதான். மேற்படி தேன்மொழி என்பவருக்கு வழக்கு சொத்து கிரையப்பாத்தியம் ஆகும். மேற்படி தேன்மொழி, முகம்மது இப்ராஹிம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். பாத்திமாகனியின் தகப்பனார் மற்றும் உடன்பிறந்தவர்கள் விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தும், அதனுடன் சேர்ந்த மொத்த 43 செண்ட்டும் பாத்திமாகனி மற்றும் அவர் தகப்பனார் முகம்மது காசிம் மற்றும் அவருடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. பாத்திமாகனியின் தகப்பனாரும் சகோதரர்கள் வழக்கு சொத்து மற்றும் அதனுடன் சேர்ந்த மொத்த சொத்தான 43 செண்ட் விஸ்தீரணம் கொண்ட சொத்தில் பாகம் கேட்டு இராமநாதபுரம் மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகவழக்கில் ஏற்பட்ட உத்தரவின்பேரில் மேல்முறையீடு மனு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2ம் மேல்முறையீடு பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரிந்தும் வழக்கிற்காக அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 2வது மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது பாத்திமாகனியின் தகப்பனார் இறந்துவிட்டதால் அவரது வாரிசாக பாத்திமாகனி சேர்க்கப்பட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாத்திமாகனி 2002யிலேயே 2ம் மேல்முறையீட்டில் தரப்பினராக சேர்ந்துவிட்டார் என்றும் அதனை மறைத்து தனது மகனுக்கு 16.09.2002ம் தேதி இனாம் பாத்திரம் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு சொத்து சம்பந்தமாக தலைக்கொடி ஹாஜியாரப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்று மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு மு.வ.எண்.17/2005 ல் இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் அதில் பாத்திமாகனி மறறும் அவரது மக்கள் கட்சிக்காரர்களாக

இருந்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் ஏற்பட்ட உத்தவின்பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 2ம் மேல்முறையீடு வரை சென்றது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி 2 வழக்குகளிலும் தீர்ப்பு ஏற்பட்ட பின்பு வழக்கு சொத்துக்களை பொறுத்து இறுதி நிலை தீர்ப்பாணை ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையின்படி 43 செண்ட் சொத்து முழுவதும் பாத்திமாகனியின் தகப்பனார் மற்றும் அவரது சகோதர சகோதரிகளுக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. இந்த இறுதிநிலை தீர்ப்பாணையின் படி நீதிமன்ற அமினா மூலமாக பாகஸ்தர்களுக்குரிய பாகச்சொத்து பிரித்து ஒப்படைக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி வழக்கு விபரங்கள் அனைத்தையும் மறைத்து பாத்திமாகனி அவரது மகன் முகம்மது இபுராஹிமுக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இனாம் செட்டில்மெண்ட்டை வைத்து முகம்மது இப்ராஹிம், தேன்மொழியுடன் கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டார் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரி முகம்மது இபுராஹிம்முக்கு எதிராக தேன்மொழி இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் மு.வ.எண் 14/2009 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை முகம்மது இபுராஹிம் நடத்தாமல் எக்ஸ்பார்ட்டி ஆகிவிட்டார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அதன்பின்பு மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் இ.பி.30/2010 தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் மூலம் கிரையப்பத்திரம் எழுதி பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் தாவா சொத்தின் அனுபவத்தை தேன்மொழி நீதிமன்றம் மூலம் எடுத்துக்கொண்டார் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். ஒ.எஸ்.14/2009 மற்றும் இ.பி.30/2010 ஆகிய வழக்குகள் நடைபெற்றபோது உயர்நீதிமன்றத்தில் 2ம் மேல்முறையீடு எண் 1211/1990

என்ற வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது அதை தெரிந்து பாத்திமாகனி தன் மகனுக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. அந்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தேன்மொழிக்கு முகம்மது இபுராகிம் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தம் செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாக்கல் செய்து பெறப்பட்ட நீதிமன்ற தீர்ப்பாணை மற்றும் நிறைவேற்று மனு உத்தரவின்படி எழுதி வாங்கப்பட்ட கிரைய பத்திரம் ஆகியவை செல்லாது என்றால் சரியல்ல. அதனால் தேன்மொழி வாதி ராமராஜுக்கு எழுதிக்கொடுத்த 18.02.2015 தேதிய கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தினை தேன்மொழியோ, ராமராஜோ எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாகவழக்கான ஒ.எஸ்.14/1983 ல் ஏற்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் தாவா சொத்து இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு 11.09.2015 தேதிய கிரைய பத்திரம் மூலம் கிரையம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வாதி கேட்டுள்ள பரிகாரம் எதுவும் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம்/-ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .